**செய்தி வெளியீடு எண்: 364** **நாள்: 26.05.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு அம்மாவின் அரசு கொரோனா நோய் தொற்றை கட்டுப்படுத்துவதில் மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதனை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்துடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் இன்று (26.5.2020) தலைமைச் செயலகத்தில், நான்காவது முறையாக **காணொலிக் காட்சி மூலமாக கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை அடுத்த கட்ட நகர்விற்கு எடுத்து செல்லும் நோக்கத்தோடு (A way forward), மருத்துவ நிபுணர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.** இக்கூட்டத்தில் கீழ்காணும் பொருட்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

- மருத்துவ பரிசோதனைகள் தொடர்பாக செயல்படுத்தப்பட வேண்டிய புதிய உத்திகள் (Testing Strategies)
- மருத்துவ சிகிச்சை குறித்த வழிமுறைகள் / நெறிமுறைகள் (Treatment Protocols)
- இறப்புகளை தவிர்க்க மேற்கொள்ளப்பட வேண்டிய சிகிச்சை முறைகள் (Flattening the death curve)
- நோய்த் தொற்றால் எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்களை (Vulnerable groups) கண்டறிந்து அவர்களை பாதுகாப்பதற்கான வழிமுறைகள்.
- தேவைக்கேற்ப மருத்துவ வசதிகள், கட்டமைப்புகளை வலுப்படுத்துதல். (Preparedness in Hospitals)

**மேற்கண்ட வழிமுறைகளை கடைப்பிடித்து தமிழ்நாட்டில் குறிப்பாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் தொற்றை கட்டுப்படுத்த சிறப்பு நடவடிக்கைகளை (Prevention and Containment Activities) மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.**

இக்கூட்டத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் திரு. க.சண்முகம், இ.ஆ.ப.,

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ஜி. பிரகாஷ், இ.ஆ.ப., ஆகியோரும், ஜெனிவாவிலிருந்து உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி டாக்டர் சௌமியா சுவாமிநாதன், ஈரோட்டிலிருந்து இந்திய மருத்துவ கழக தலைவர் டாக்டர் சி.என். ராஜா, வேலூரிலிருந்து கிருத்துவ மருத்துவ கல்லூரி இயக்குநர் டாக்டர் ஜெ.வி. பீட்டர் ஆகியோர் காணொலி காட்சி மூலமாகவும், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் (ICMR) விஞ்ஞானியும், சென்னை, தேசிய தொற்றுநோய் நிலைய துணை இயக்குநருமான டாக்டர் ப்ரப்தீப் கவுர், உலக சுகாதார அமைப்பின் முதுநிலை மண்டல குழுத் தலைவர் டாக்டர் கே.என். அருண் குமார், தொற்றுநோய் தடுப்பு நிபுணர் டாக்டர் பி. குகானந்தம், அப்பல்லோ மருத்துவமனையின் தொற்றுநோய் ஆலோசகர் டாக்டர் வி. ராமசுப்பிரமணியம், சென்னை மருத்துவக் கல்லூரியின் பேராசிரியர் டாக்டர் ரகுநந்தன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு இயக்குநர் டாக்டர் தி.சி. செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் நாராயண பாபு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**